பாசிப்பருப்பு கிலோ ரூ. 100
First Published : 04 Jun 2010 04:53:42 AM IST



சென்னை, ஜூன் 3: பாசிப்பருப்பு விலை படிப்படியாக உயர்ந்து இப்போது கிலோ ரூ. 100-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு போதிய விளைச்சல் இல்லாததால் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு விலைகள் குறைந்த போதிலும் பாசிப்பருப்பு விலையில் பெரிய மாற்றம் இல்லாமல் இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக பாசிப்பருப்பின் விலை படிப்படியாக உயர்ந்து வந்தது. கடந்த வாரம் ரூ. 9,000-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு மூட்டை (100 கிலோ) பாசிப்பருப்பு இப்போது ரூ. 9,500-ஆக உயர்ந்துள்ளது.

சில்லறையில் ரூ. 95-ல் இருந்து ரூ. 98 முதல் ரூ. 100 வரை விற்பனை செய்யப்படுகிறது.

டிசம்பர் வரை குறைய வாய்ப்பில்லை: தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் இம்மாத இறுதிக்குள் நல்ல மழை பெய்யும் என்று கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட மாநில விவசாயிகள் எதிர்பார்த்து பாசிப்பயறு விதைப்புக்கான பணியைத் தொடங்க ஆயத்தமாகி வருகின்றனர்.

ஜூலை மாதத்தில் விதைப்பு பணிகள் ஆரம்பித்தால் நவம்பர், டிசம்பர் மாதத்தில் அறுவடைக்கு வரும். அதன் பிறகுதான் விலை குறைய வாய்ப்புள்ளது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

அதிகார மையம்: உளுத்தம் பருப்பின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் ஒரு மூட்டை உளுத்தம் பருப்பு ரூ. 7,000-க்கு விற்பனை செய்யப்பட்டது. இப்போது இதன் விலை மூட்டைக்கு ரூ. 900 உயர்ந்து ரூ. 7,900-ஆக விற்பனை செய்யப்படுகிறது. சில்லறையில் ஒரு கிலோ ரூ. 73-ல் இருந்து ரூ. 83-ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிகக் கழகம் மொத்தமாக கொள்முதல் செய்துள்ளதாலும், விலையை நிர்ணயிப்பதில் வடமாநிலத்தைச் சேர்ந்த சில மொத்த வியாபாரிகள் அதிகார மையமாக (சிண்டிகேட்) திகழ்வதாலுமே உளுத்தம் பருப்பின் விலை உயர்ந்து வருவதாக தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி. சொரூபன் தெரிவித்தார்.

துவரம் பருப்பு மூட்டை ரூ. 6,700-ல் இருந்து ரூ. 6,900-ஆக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ ரூ. 70-ல் இருந்து ரூ. 72-ஆக உயர்ந்து விற்பனை செய்யப்படுகிறது. இரண்டாம் வகை துவரம் பருப்பு கிலோ ரூ. 62-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடலை எண்ணெய் விலை உயர்வு: கடலை எண்ணெய் விலை கடந்த வாரத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ. 6 வரை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ரூ. 74-க்கு விற்பனை செய்யப்பட்ட கடலை எண்ணெய் இப்போது கிலோ ரூ. 80-க்கு விற்பனை செய்யப்படுகிறது. பாமாயில் கிலோ ரூ. 42-ல் இருந்து ரூ. 43-ஆகவும், அக்மார்க் நல்லெண்ணெய் கிலோ ரூ. 110, இரண்டாம் ரக நல்லெண்ணெய் கிலோ ரூ. 65, சூரியகாந்தி எண்ணெய் ரூ. 50-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

முதல் ரக தேங்காய் எண்ணெய் ரூ. 75-ல் இருந்து ரூ. 80- ஆகவும், இரண்டாம் ரக தேங்காய் எண்ணெய் ரூ. 65-க்கும் விற்கப்படுகிறது. வனஸ்பதி விலை கிலோ ரூ. 48-ல் இருந்து ரூ. 55-ஆக உயர்ந்துள்ளது.

சர்க்கரை விலை குறைவு: சர்க்கரை விலை படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த வாரம் ஒரு மூட்டை (100 கிலோ) சர்க்கரை ரூ. 2,890-ல் இருந்து ரூ. 2,820-ஆகவும், 2-ம் ரக சர்க்கரை மூட்டை ரூ. 2,850-ல் இருந்து ரூ. 2,810-ஆகவும் குறைந்துள்ளது. சில்லறையில் ரூ. 30-க்கு விற்பனையான சர்க்கரை ரூ. 29-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**நல்ல வருமானம் தரும் கிளேடிஓலஸ் மலர் சாகுபடி**

First Published : 03 Jun 2010 12:00:00 AM IST



கிளேடிஓலஸ் வண்ண மலர்கள்

சிதம்பரம்: பூங்கொத்துகளில் பய ன்படுத்தப்படும் வண்ண மலர்களே கிளேடிஓலஸ். வடமாநிலங்களில் பயிர் செய்யப்படும் இம் மலரை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை தமிழகத்தில் அறிமுகம் செய்து சாகுபடியில் வெற்றி கண்டுள்ளது. நல்ல வருமானம் தரக்கூடிய இம் மலர் சாகுபடியை தமிழக விவசாயிகள் சிறப்பாக செய்யலாம்.

**சாகுபடி குறிப்புகள்:**

இம் மலர் கரணைகள் மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. வெங்காயம் மற்றும் பூண்டு குடும்பத்தைச் சேர்ந்தது கிளேடிஓலஸ். இம் மலர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் நல்ல வடிகால் வசதி கொண்ட நிலத்தை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

தண்ணீர் தேங்கி நிற்கும் களிமண் நிலங்களில் இம்மலர் நன்றாக வளராது. மழை மற்றும் பனிக் காலங்களில் 15 முதல் 20 செல்சியஸ் வரை வெப்பம் கொண்ட பகுதிகளில் இளம்பருவத்தில் நன்றாக வளரும் தன்மை கொண்டது.

பின்னர் வெப்பத்தின் அளவு 40 டிகிரி செல்சியஸ் வரை அதிகமானாலும் மலர் செடியின் வளர்ச்சி பாதிக்கப்படாது. இம்மலர் சாகுபடி செய்ய தேர்வு செய்யப்படும் நிலத்தில் கார அமிலத்தன்மை 6 முதல் 7 வரை இருத்தல் வேண்டும்.

இவ்வாறு தேர்வு செய்தபின் வெப்பப் பகுதிகளில் நன்றாக வளரும் தன்மை கொண்ட கிளேடிஓலஸ் மலர் வகைகளான அமெரிக்கன் பியூட்டி, சம்மர் சன்ஷைன், கேண்டிமென் உள்ளிட்ட ரகங்களை விவசாயிகள் தங்கள் தோட்டங்கள் மற்றும் நிலங்களில் நடவு செய்யலாம்.

கிளேடிஓலஸ் கரணைகளை வரிசையாக 10 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும். பின்னர் 2 அல்லது 3 வாரங்களுக்கு பூவாளிகளை கொண்டு தொடர்ச்சியாக நீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்து 2, 3 வாரங்களில் மெதுவாக கிளேடிஓலஸ் மலர் செடி முளைக்கத் தொடங்கும். இத்தகைய காலகட்டத்தில் விவசாயிகள் கண்டிப்பாக நீர்பாசனத்தை தொடர்ந்து செய்ய வேண்டும். 2 முதல் 4 இலைகள் விடும் தருணத்தில் 12 முதல் 17 நாள்கள் வரை தொடர்ந்து நீர்பாய்ச்ச வேண்டும். பின்னர் களைகளை கட்டுப்படுத்த களையெடுக்கும் பணியை தொடர்ந்து மேற்கொள்வது அவசியம்.

இவ்வாறு சாகுபடி பணிகளை மேற்கொண்ட 45-60 நாள்களில் கிளேடிஓலஸ் பூங்கொத்துக்கள் பூக்கத் தொடங்கும். இத்தகைய தருணத்தில் விவசாயிகள் கிளேடிஓலஸ் அறுவடை காலத்தை அடைந்து விட்டதை தெரிந்து கொண்டு அறுவடை செய்து விற்பனை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கிளேடிஓலஸ் பூக்களை அறுவடை செய்தபின் கரணைகளை மீண்டும் தோண்டி எடுத்து 2 சதவீதம் பெவிஸ்டின் பூஞ்சானக் கொல்லி மருந்தில் நனைத்து பதப்படுத்த வேண்டும்.

**மருத்துவ குணங்கள்:**

கிளேடிஓலஸ் கரணைகளை நன்றாக பொடி செய்து உணவுடன் கலந்து உண்டால் வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்தும். இச்செடியை கசக்கி சூடுபடுத்தி தலையில் தேய்த்தால் தலைவலி போகும். இப் பழக்கம் வடமாநிலங்களில் நடைமுறையில் உள்ளது. மலைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் கிளேடிஓலஸ் மலர் கரணைகளை உணவாக உட்கொள்ளும் பழக்கம் ஜம்மு மற்றும் வடமாநிலங்களில் உண்டு.

**கிளேடிஓலஸ் ஆண்டு அறிவிப்பு:**

2010-11-ம் ஆண்டை கிளேடிஓலஸ் மலர் ஆண்டாக இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது. இந்நிலையில் குறைந்த செலவில் அதிக லாபம் தரும் இந்த மலரை சாகுபடி செய்து விவசாயிகள் தமிழகத்தில் மலர்புரட்சியை ஏற்படுத்தலாம் என அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் கூறியுள்ளார்.

**சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த காளான்**

First Published : 03 Jun 2010 01:03:35 PM IST

கொடைக்கானல், ஜூன் 2: கொடைக்கானலில் பொதுவாக பல இடங்களில் உருவாகும் காளானில் உணவுக் காளான், போதைக் காளான், சாதாரண காளான் ஆகியவை உள்ளன.

மழை பெய்தால் அதிகம் முளைக்கும் காளான்கள் சாதாரணமானவை. இவற்றில் தற்போது அடர்ந்த காட்டுப் பகுதியில் முளைத்துள்ள வண்ணமிகு காளான் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளன.

கொடைக்கானலிலிருந்து சுமார் 25 கி.மீ தூரம் உள்ள பேரிஜம் பகுதி முழுவதும் வனத் துறைக்கு கட்டுப்பட்டது.

அங்கு அடர்ந்த காடுகள், பசுமையான சோலைகள், உயர்ந்த மரங்கள், வன விலங்குகள், பள்ளத்தாக்குகள் இருப்பதால், அப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பி வருகின்றனர். அப் பகுதிக்குச் செல்வதற்கு வனத் துறையினரிடம் அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும்.

கடந்த 10 தினங்களுக்கு முன் பேரிஜம் பகுதியில் இடியுடன் பெய்த மழையால், அடர்ந்த காடுகளில் உள்ள ஃபைன் மரங்களுக்கு அடியில் சிவப்பு நிறம் கொண்ட வண்ணமிகு காளான்கள் முளைத்துள்ளன. இவை பார்ப்பதற்கு அழகு தோற்றத்துடன் காணப்பட்டாலும், இவை நச்சுத் தன்மை கொண்டது.

இருப்பினும், இவற்றை சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் பார்த்து ரசித்து வருகின்றனர்.

**இறைச்சி காடை குஞ்சு உற்பத்தி: ஒருநாள் இலவச பயிற்சி வகுப்பு**

First Published : 03 Jun 2010 11:18:31 AM IST

நாமக்கல், ஜூன் 2: இறைச்சிக்கான காடை குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைகள் குறித்து நாமக்கல்லில் ஒருநாள் இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் வேளாண்மை அறிவியல் நிலையம் இயங்கி வருகிறது. இந்த நிலையம் சார்பில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், விவசாயிகளுக்கு வேளாண்மையுடன் மாற்றுத் தொழில்களில் வருவாயைப் பெருக்கித் தரவும் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக இறைச்சிக்கான காடைக் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைகள் என்ற தலைப்பில் வரும் 8-ம் தேதி இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இப் பயிற்சியில், காடை இனங்கள் மற்றும் அவற்றைத் தேர்வு செய்தல், குஞ்சு உற்பத்திக்கான கொட்டகை அமைத்தல், வளர்ப்பு முறைகள், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்கான தீவன முறைகள், முட்டைகளை சேகரித்து குஞ்சு பொரிக்கும் வழிமுறைகள், காடைக் குஞ்சுகளை தாக்கும் நோய்கள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் குறித்து செயல்விளக்கத்துடன் கற்றுத்தரப்படும். சந்தை வாய்ப்புகள், காடை உற்பத்தி பொருளாதார முறைகள் குறித்தும் விளக்கப்படும்.

பண்ணையாளர்கள், விவசாயிகள், தொழில்முனைவோர், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளோர் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டிய முகவரி: வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகம்,

மோகனூர் சாலை, நாமக்கல். 04286- 266345, 266244 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டு வரும் 7-ம் தேதிக்குள் தங்களது பெயரை பதிவு செய்ய வேண்டும்.

**விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் மினி டிராக்டர், டிரைய்லர் வழங்க முடிவு**

First Published : 04 Jun 2010 09:07:37 AM IST

வந்தவாசி, ஜூன் 3: விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்க மினி டிராக்டர் மற்றும் டிரைய்லர் ஆகியவற்றை வாங்குவது என தெய்யார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வந்தவாசியை அடுத்த தெய்யார் கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்துக்கு, சங்கத்தின் தனி அலுவலர் உ.சிதம்பரம் தலைமை வகித்தார். சங்கச் செயலர் ஆ.உதயகுமார், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சூரியகலா கோவிந்தன், லட்சுமிகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விவசாய பயன்பாட்டு மையம் மூலம் விவசாய நிலங்களில் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்து அதற்கான தீர்வு காண்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**தேன் விற்பனை அமோகம் : ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வருமானம்**

ஜூன் 04,2010,09:08



மதுரை: மதுரை மாவட்ட சர்வோதய சங்கத்தின் மூலம் ஆண்டுக்கு எட்டு லட்ச ரூபாய் வரை தேன் விற்பனையாகிறது. தேனீக்கள் வளர்ப்போர் மதுரையில் அதிகரித்து வருகின்றனர். தமிழகத்தில் கன்யாகுமரி மாவட்டத்தில் அதிகளவில் தேன் சேகரிக்கப்படுகிறது. குறிப்பாக மார்த்தாண்டம் பகுதியில் ரப்பர் தொழில் இருப்பதால், அங்கிருந்து ரப்பர் தேன் அதிகம் கிடைக்கிறது. மற்ற தேனை விட இதில் சிறப்பான அம்சம், ரப்பர் பூக்களிலிருந்து கிடைப்பதில்லை. இலைகளிலிருந்து தேன் சேகரிக்கப்படுகிறது. மதுரையில் பாலமேடு, சத்திரபட்டி, நத்தம், சிறுமலை பகுதிகளில் தற்போது தேனீ வளர்ப்போர் பெருகியுள்ளனர். இப்பகுதியில் பூ பூக்கும் சீசனுக்கு ஏற்ப மாந்தேன், வேப்பந்தேன், செம்பருத்தி தேன் கிடைக்கிறது. தற்போது நாவல் மரம் பூக்கும் சீசன் துவங்குவதால், நாவல் தேன் கிடைக்கும். தேனை சுத்திகரிப்பதற்காக, அவனியாபுரத்தில் தனியாக மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மதுரை மாவட்ட சர்வோதய சங்க செயலாளர் பத்மனாபன் கூறியதாவது:சுத்திகரிக்கப்படாத தேன் ஒரு கிலோ 90 ரூபாய். சீசன் காலங்களில் அதிகம் கிடைப்பதால் கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை குறையும். 100 கிலோ தேனை சுத்திகரிக்கும் போது, தேன்மெழுகு, கழிவுகள் அதிகம் வீணாகும். சுத்தம் செய்யப்பட்ட தேன் ஒரு கிலோ 160க்கு பாட்டிலில் அடைத்து விற்கிறோம். அரைகிலோ, கால்கிலோ, 100 கிராம் பாட்டில்களில் விற்கிறோம். அலங்காநல்லூர், நாகமலைபுதுக்கோட்டை சர்வோதய சங்கங்களின் மூலம் 5 சதவீத தேன் விற்பனையாகிறது. மீதி 95 சதவீதம் மதுரை டவுன்ஹால் ரோட்டில் உள்ள சர்வோதய சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. வெறும் மருந்துப் பொருளாக மட்டுமல்லாமல், உணவுப் பொருளாகவும் தேனை சாப்பிடலாம் என்ற விழிப்புணர்வு மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் ஆண்டுக்கு எட்டு லட்ச ரூபாய் அளவில் விற்பனையாகிறது. மேலும் தேனீக்களை வளர்ப்போரும் அதிகரித்துள்ளனர், என்றார். தேனீக்களை வளர்ப்பதற்கு வங்கிகள் தாராளமாக கடன் தருகின்றன. மாவட்ட தொழில் மையம், கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் வாரியத்தின் மூலம் பயிற்சி பெற்று, கடன் வாங்கலாம்.

**உழவர் வயல்வெளி பள்ளி நிறைவு விழா**

செங்கல்பட்டு : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையம் செம்மைநெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பில் உழவர்களுக்கான வயல்வெளிப் பள்ளி திட்டத்தை திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் உள்ள தாழம்பேடு கிராம வயல்வெளியில் நடத்தியது.

தாழம்பேடு கிராமத்தைச் சேர்ந்த 10 பண்ணை மகளிர் உட்பட 32 நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பிப்ரவரி 5ம் தேதி துவங்கிய பயிற்சி கடந்த 31ம் தேதி நிறைவு பெற்றது.பயிற்சியில் செம்மைநெல் சாகுபடியில் விதை நேர்த்தி செய்தல், பாய் நாற்றங்கால் தயாரிக்கும் முறை, நாற்றங்காலில் 0.5 சதவீத யூரியா கரைசலை தெளித்து பயிர் வளர்ச்சியை ஊக்குவிப்பது, நாற்றுகளை பறித்து ஒவ்வொரு நாற்றாக பிரித்தெடுத்து நடவு வயலில் சதுரமுறையில் நடவு மேற்கொள்வது, கோனாவீடர் கருவி மூலம் நெல்வயலில் உள்ள களைகளை மடக்கி நெல்வயலுக்கு தழைஉரமாக மாற்றுவது உட்பட பல்வேறு பயிற்சி அளிக்கப்பட்டது.ஒரு ஏக்கர் பரப்பளவில் மாதிரி நெல் வயலை இரண்டாக பிரித்து ஒரு பகுதியில் பாரம்பரிய சாகுபடி முறையில் நெல் சாகுபடி மற்றொரு பகுதியில் செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டு இரண்டிற்கும் உள்ள வித்தியாசங்கள் மற்றும் சிறப்பம்சங்கள் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன.நிறைவு விழாவில் தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

விரிவாக்க கல்வி இயக்குனர் கதிரேசன் பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் கள் வழங்கினார். நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சுதாகர், வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**பாசன வாய்க்கால் தூர் வாரும் பணி: கலெக்டர் நேரில் ஆய்வு**

கடலூர : காவிரி பாசனப்பகுதி வாய்க்கால் தூர்வாரும் பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார்.இது குறித்து செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பாதவது:மாவட்டத்தில் காவிரி பாசனப் பகுதிகளில் அடங்கிய 56 வாய்க்கால் களை தூர்வார 2.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) மூலம் நடைபெற்று வருகிறது. நேற்று வீராணம் ஏரிக்கரை பகுதியைச் சேர்ந்த பூதங்குடியில் கோதாவரி, மணவாய்க்கால், குணவாசல், எல்லேரி வாய்க்கால் தூர்வாரும் பணிகளை கலெக்டர் சீத்தாராமன் ஆய்வு செய்தார். பின்னர் சிதம்பரத் தில் பல்வேறு பகுதி விவசாயிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது மாவட்டத்தில் தற் போது 56 வடிகால் மற்றும் வாய்க் கால் தூர்வாரும் பணிகள் 2.50 கோடி ரூபாய் செலவில் நடந்து வருகிறது. தூர் வாரும் பணிகள் குறித்து விவசாயிகள் தங்களது ஆலோசனைகள் மற்றும் புகார்களை செயற்பொறியாளர் ஒதம்பரம் 944392948, உதவி செயற்பொறியாளர் அணைக்கரை 9842258499, உதவி செயற்பொறியாளர் சிதம்பரம் 9443650656, உதவி செயற்பொறியாளர் லால்பேட்டை 9442312589 எண்களுக்கு தெரிவிக்கலாம். பணிகள் நடைபெறும் இடங்களில் பணியின் தன்மை, நிதி ஒதுக்கீடு, வேலை துவங்கிய நாள், முடிக்க உள்ள நாள் அடங்கிய பலகைகளை வைக்க கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார்.

**கரும்பு விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்**

சேத்தியாத்தோப்பு : சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சோழத்தரம் கரும்பு கோட்ட அலுவலகம் சார் பில் பு.குடிகாடு கிராமத்தில் கரும்பு விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது.கரும்பு அலுவலர் சந்திரசேகரன் தலைமை தாங்கினார். கோட்ட கரும்பு அலுவலர் ராஜதுரை வரவேற் றார். புதிய ரகங்கள் பயிரிடுதல் 5 அடி பார் முறையில் அதிக பரப்பளவில் கரும்பு பயிரிடுதல், சொட்டு நீர் பாசனம், அரசின் மானிய உதவிகள் குறித்து கூட்டத்தில் கலந் தாய்வு செய்யப்பட்டது.கூட்டத்தில் கேப்டன் விவசாயிகள் சங்க செயலாளர் ராமையன், செல்வமணி, சுந்தரமூர்த்தி, கரும்பு உதவியாளர்கள் ராஜாராமன், ராமலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.சிவக்குமார் நன்றி கூறினார்.

**கோடைக்கு பின் அதிகளவில் மாடு விற்பனை ரூ.29 ஆயிரத்துக்கு விலை போன "சிந்து' ரகம்**

ஈரோடு: ஈரோடு மாட்டுச்சந்தையில் நேற்று ஆயிரக்கணக்கான மாடுகள் விற்பனைக்கு வந்தன. பல மாதங்களுக்கு பிறகு அதிகளவு மாடுகள் வந்தது மட்டுமின்றி, நல்ல விலைக்கு விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாட்டு சந்தை நடக்கிறது. கேரள அடிமாட்டு வியாபாரிகள் மற்றும் கர்நாடக வியாபாரிகள் அதிகம் பேர் மாடுகளை வாங்கி செல்கின்றனர். கடுமையான வறட்சி காரணமாக நான்கு மாதங்களாக மாடு வரத்து குறைவாகவே இருந்தது. விவசாயிகள் மாடுகளை குறைந்த விலைக்கு விற்க விரும்பினாலும், மாடுகளை வாங்க வியாபாரிகள் வரவில்லை. நேற்று மாட்டுச் சந்தையின் போது ஏராளமான பசு மாடுகள், எருமை மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தன. சந்தையில் எங்கு பார்த்தாலும் மாடுகளின் சத்தமே கேட்டது.

மாட்டுச்சந்தை வியாபாரிகள் கூறியதாவது: பல மாதங்களாக மாட்டு சந்தையில் மாடுகளின் வரத்து குறைவாகவே இருந்தது. கோடை காலத்தின் உச்சத்தால் மாட்டுத் தீவனம் கிடைக்காமல், மிகவும் கஷ்டப்பட்டோம். நாளடைவில் பிரச்னைகளை சமாளித்தோம். இன்று நடந்த மாட்டு சந்தையில் ஏராளமான விவசாயிகள் பல்வேறு பகுதிகளில் இருந்து மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக பசு மாடுகள் அதிகளவு வந்துள்ளது. சிந்து கிராஸ், சிந்து பசு மாடுகள் அதிகளவு விற்றன. எருமை மாடுகளும் கணிசமாக வந்துள்ளன. சந்தையிலேயே பசு மாடுகள் பல கன்று ஈன்றன. சிந்து கிராஸ் பசு 29 ஆயிரம் ரூபாய்க்கும், சிந்து பசு 27 ஆயிரம் ரூபாய்க்கும் விற்றது. 14 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரை மாடுகள் விலை இருந்தது. கேரள, கர்நாடக வியாபாரிகள் போட்டி போட்டு மாடுகளை வாங்கி சென்றுள்ளனர். இதுதவிர கோவை, பொள்ளாச்சி, சேலம், விழுப்புரம், ஆத்தூர் வியாபாரிகளும் மாடுகளை வாங்கி சென்றனர். மாடுகளின் வரத்து அதிகமாக இருந்ததால், ஆங்காங்கே மாடுகளுக்கு கொம்பு சீவும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். சாட்டை, மணிகள் விற்பனையும் அதிகரித்துள்ளது. பல மாதங்களுக்கு பிறகு மாடு விற்பனை உயர்ந்துள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

### குறுவை சாகுபடிக்கு 153 டன் விதை நெல் தயார் தஞ்சைக்கு பயணமாக கோபியில் காத்திருப்பு

கோபிசெட்டிபாளையம்: குறுவை சாகுபடிக்காக தஞ்சை டெல்டா பகுதிக்கு அனுப்ப முதல் கட்டமாக 153 டன் விதை நெல் கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தயார் நிலையில் உள்ளது. வழக்கம் போல் வரும் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டால், விதை நெல் தஞ்சைக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோபி வேளாண் உற்பத்தியாளர் சங்கத்தில் நல்ல முளைப்பு திறன் கொண்ட சான்று பெற்ற விதை நெல் ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, திண்டுக்கல் மாவட்டங்களுக்கு ஆண்டு முழுவதும் இங்கிருந்து விதை நெல் அனுப்பி வைக்கப்படுகிறது. சென்றாண்டு டெல்டா பகுதிக்கு மட்டும் 64 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 283 டன் விதை நெல் கோபியில் இருந்து அனுப்பப்பட்டது.
நடப்பாண்டு டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக பி.பி.டி., விதை நெல் ரகம் 153 டன் கோபியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொன்னி ரகம் ஆறு டன், கோ-43 ரகம் 20 டன், ஐ.ஆர் 20., 37 டன் விதை நெல் முளைப்புத்திறன் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. தஞ்சை டெல்டா பாசனத்தில் குறுவை சாகுபடிக்காக ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்.

அணையின் நீர் இருப்பு 52 டி.எம்.சி.,யாக இருந்தால் மட்டுமே குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்கப்படும். ஆனால் கடந்த 29ம் தேதி நிலவரப்படி மேட்டூர் அணையில் 37 டி.எம்.சி., மட்டுமே நீர் இருந்தது. இதனால், நடப்பாண்டு குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறப்பது தள்ளிபோகும் என தெரிகிறது.

"தண்ணீர் திறப்புக்கு இன்னும் எட்டு நாட்கள் பாக்கியுள்ள நிலையில் தென்மேற்கு பருவமழை காரணமாக மேட்டூர் அணைக்கு கூடுதல் நீர் வந்து, நீர் இருப்பு 52 டி.எம்.சி.,யாக உயர்ந்தால், வழக்கம் போல் வரும் 12ம் தேதி அணை திறப்பில் பாதிப்பில்லை. இதன்பின், கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் இருந்து தஞ்சை கூட்டுறவு இணையத்துக்கு விதை நெல் அனுப்பப்படும்.

**துவரை பயிர் செயல்விளக்க திடலுக்கு மானியம்: உதவி இயக்குனர் தகவல்**

பள்ளிபாளையம்: துவரைப் பயிர் செயல்விளக்க திடல் அமைக்க மானியம் வழங்கப்படும் என்று வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பள்ளிபாளையம் வட்டாரத்தில் துவரை சாகுபடி பெரும்பாலும் மானாவாரி பகுதியில் மட்டுமே உள்ளது. நிலக்கடலை பயிரில் ஊடுபயிராக மட்டுமே துவரை விதைப்பு மேற்கொள்ளப்படுகிறது. அதனால் துவரை உற்பத்தி குறைந்தே பெறப்பட்டு வருகிறது. இறவை பகுதியில் குறைந்த நீர்பாசன வதியுடன் கூடிய வயல்களில் தனிப்பயிராக துவரை சாகுபடி செய்திட செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட உள்ளன. இவை 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். அதிக விளைச்சல் தரக்கூடய துவரை ரகம் ஐ.சி.பி.எல். 85063 நடப்பு ஆண்டில் செயல்விளக்க திடல் மூலமாக புகுத்தப்படுகிறது. தற்போது பரவலாக மழைபெய்து வருவதால் குறைந்த நீர்பாசன வசதி மிக்க பகுதியில் புதிய துவரை ரகத்தினை விவசாயிகள் தனிப்பயிராக சாகுபடி செய்து பயனடையலாம். வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் செயல்விளக்க திடலுக்கான இடுபொருட்களை பெற்று பயனடையலாம். இறவையில் தனிப்பயிராக துவரை செயல்விளக்க திடல் அமைக்க 20 கிலோ ஐ.சி.பி.எல். 85063 ரக விதை தேவைப்படும். ஜிப்ஸம், நுண்ணூட்டச்சத்து, உயர் உரங்கள், விதைநேர்த்தி, களைக்கொல்லி போன்றவை பரிந்துரைப்படி தேவைக்கேற்ப வழங்கப்படும்.

பயிர்பாதுகாப்பு, இனக்கவர்ச்சிப்பொறி உட்பட அனைத்து புதிய தொழில் நுட்பங்களையும் விவசாயிகள் பின்பற்றி, தனிப்பயிராக கிணற்று பாசனப் பகுதியில் துவரை செயல்விளக்க திடல் அமைத்தால் மட்டுமே மானியம் வழங்கப்படும். குறைந்த பாசன வசதி மிக்க புதிய துவரை சாகுபடி தொழில்நுட்பங்களை பின்பற்றி தனிப்பயிராக செயல்விளக்கத் திடல் அமைக்க உள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு அதிகபட்ச மானியமாக 5,000 ரூபாய் மட்டும் அனுமதித்து மீதம் வசூலிக்கப்படும். விவசாயிகள் தமது நில ஆவணங்களுடன் பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் பதிவு செய்து கொண்டால் முன்னுரிமை அடிப்படையில் துவரை செயல்விளக்க திடல் அமைக்க இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படும்.

**புகளூர் பாசன வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் பயிர் சருகாகும் அவலம்: விவசாயிகள் விரக்தி**

வேலாயுதம்பாளையம்: புகளூர் பாசன வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான ஏக்கரில், வெற்றிலை, வாழை, கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர் கோடையின் வெப்பத்தை தாக்குக்குப்பிடிக்காமல் காய்ந்து சருகும் நிலை ஏற்பட்டுள்ளது. வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதி விவசாயிகளுக்கு புகளூர் பாசன வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்யபடுகிறது.

இந்நிலையில் காவிரி ஆற்றில் போதிய நீர்வரத்து இல்லாததாலும், வாய்க்காலை தூர்வாரும் பணிக்காகவும் கடந்த 30ம் தேதி முதல் தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம் கருமண்டான்பாளையம் - ஜேடர்பாளையம் தடுப்பு மதகு பகுதியிலிருந்து புகளூர் பாசன வாய்க்கால் பிரிக்கப்பட்டு ஈரோடு மாவட்டத்தின் ஒரு பகுதி போக கரூர் மாவட்டத்தில் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, நடையனூர், கோம்புபாளையம், திருக்காடுதுறை, கட்டிபாளையம், கூலக்கவுண்டனூர், பாலத்துரை, புகளூர், செம்பாடாபாளையம், தோட்டக்குறிச்சி, தளவாபாளையம் பகுதிகள் வரை 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மஞ்சள், நெல், கரும்பு, வெற்றிலை, வாழை, தென்னை, கோரை உள்ளிட்ட பயிருக்கு பாசனம் செய்யப்படுகிறது. அக்னி நட்சத்திரம் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட மறுதினமே வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதுக்குறித்து புகளூர் பகுதி விவசாயிகள் சுப்பிரமணி, அருணாசலம், நடேசன், ராஜேந்திரன் கூறியதாவது: புகளூர் பகுதியில் விவசாயம் நடப்பது களிமண் நிரம்பிய பகுதியில் அதிகம். இங்கு வெற்றிலை கொடி அதிகம் ஈரப்பதத்தில் இருந்தால் மட்டுமே நன்கு வளரும். எனவே, ஒவ்வொரு வெற்றிலை நடவுக்கும் கிடங்கு (குழி) வெட்டி நீர் நிர ப்பி வளர்க்கிறோம். தற்போது அக்னி வெயில் முடிந்தாலும் அ திக வெப்பம் சுட்டெரிக்கிறது. தற்போதைய வெப்பத்தில் தண்ணீர் அதிகம் இருக்கும்போதே வெற்றிலை காய்ந்து விடும் நிலையில், தண்ணீரே இல்லாமல் உள்ளதால் சாகுபடி என்னவாகுமோ? என்று தெரியாமல் தவிக்கிறோம். தற்போது தூர்வாரும் பணிக்காக நீர் அடைக்கப்பட்டுள்ளது என்றும், சிலர் காவிரியில் தண்ணீர் இல்லாததால் தண்ணீர் அடைக்கப்பட்டுவிட்டது என்றும் கூறுகின்றனர்.

எதுவாயினும் குறிப்பிட்ட 15 முதல் 20 நாட்களுக்குள் தண்ணீ ர் வாய்க்காலில் திறக்கப்படவி ல்லை என்றால், விவசாயிகளின் நிலைமையும், விவசாய சாகுபடியும் கவலைக்கிடமாகிவிடும். இவ்வாறு அவர்கள் கூறினர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட நாள் அறிவித்து, தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்ய விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**தேன் விற்பனை அமோகம் ஆண்டுக்கு எட்டு லட்ச ரூபாய்**

மதுரை:மதுரை மாவட்ட சர்வோதய சங்கத்தின் மூலம் ஆண்டுக்கு எட்டு லட்ச ரூபாய் வரை தேன் விற்பனையாகிறது. தேனீக்கள் வளர்ப்போர் மதுரையில் அதிகரித்து வருகின்றனர்.தமிழகத்தில் கன்யாகுமரி மாவட்டத்தில் அதிகளவில் தேன் சேகரிக்கப் படுகிறது. குறிப்பாக மார்த்தாண்டம் பகுதியில் ரப்பர் தொழில் இருப்பதால், அங்கிருந்து ரப்பர் தேன் அதிகம் கிடைக்கிறது. மற்ற தேனை விட இதில் சிறப்பான அம்சம், ரப்பர் பூக்களிலிருந்து கிடைப்பதில்லை. இலைகளிலிருந்து தேன் சேகரிக்கப்படுகிறது. |

மதுரையில் பாலமேடு, சத்திரபட்டி, நத்தம், சிறுமலை பகுதிகளில் தற்போது தேனீ வளர்ப்போர் பெருகியுள்ளனர். இப்பகுதியில் பூ பூக்கும் சீசனுக்கு ஏற்ப மாந்தேன், வேப்பந்தேன், செம்பருத்தி தேன் கிடைக்கிறது. தற்போது நாவல் மரம் பூக்கும் சீசன் துவங்குவதால், நாவல் தேன் கிடைக்கும். தேனை சுத்திகரிப்பதற்காக, அவனியாபுரத்தில் தனியாக மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மதுரை மாவட்ட சர்வோதய சங்க செயலாளர் பத்மனாபன் கூறியதாவது: சுத்திகரிக்கப்படாத தேன் ஒரு கிலோ 90 ரூபாய். சீசன் காலங்களில் அதிகம் கிடைப்பதால் கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை குறையும். 100 கிலோ தேனை சுத்திகரிக்கும் போது, தேன்மெழுகு, கழிவுகள் அதிகம் வீணாகும். சுத்தம் செய்யப்பட்ட தேன் ஒரு கிலோ 160க்கு பாட்டிலில் அடைத்து விற்கிறோம். அரைகிலோ, கால்கிலோ, 100 கிராம் பாட்டில்களில் விற்கிறோம்.

அலங்காநல்லூர், நாகமலைபுதுக்கோட்டை சர்வோதய சங்கங்களின் மூலம் 5 சதவீத தேன் விற்பனையாகிறது. மீதி 95 சதவீதம் மதுரை டவுன்ஹால் ரோட்டில் உள்ள சர்வோதய சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. வெறும் மருந்துப் பொருளாக மட்டுமல்லாமல், உணவுப் பொருளாகவும் தேனை சாப்பிடலாம் என்ற விழிப்புணர்வு மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் ஆண்டுக்கு எட்டு லட்ச ரூபாய் அளவில் விற்பனையாகிறது.

மேலும் தேனீக்களை வளர்ப்போரும் அதிகரித்து உள்ளனர், என்றார். தேனீக்களை வளர்ப்பதற்கு வங்கிகள் தாராளமாக கடன் தருகின்றன. மாவட்ட தொழில் மையம், கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் வாரியத்தின் மூலம் பயிற்சி பெற்று, கடன் வாங்கலாம்.

**தோட்டக்கலை பயிர்களுக்கு மானியம்**

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம் உதவி இயக்குனர் மோகன் குமார் அறிக்கை: திருப்பரங்குன்றம் பகுதி விவசாயிகளுக்கு, மா, நெல்லி, ஒட்டுரக வாழை, மல்லிகை பூ மற்றும் கோகோ செடிகள் மற்றும் திரவ உரம், மருந்து, இடுபொருட்கள் 50 முதல் 75 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. பயனடைய விரும்பும் விவசாயிகள், நிலத்தின் சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல், போட்டோ ஆகியவற்றுடன் திருநகர் 2வது பஸ் ஸ்டாப் யூனியன் அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலத்தில்விண்ணப்பிக்கலாம்.விபரங்களுக்கு 94438 55996, 94426 26978, 0452-2488066ல் தொடர்பு

கொள்ளலாம்.

**பருத்தி வரத்து அதிகரிப்பு**

அவிநாசி : அவிநாசியில் நடந்த ஏலத்துக்கு பருத்தி வரத்து சற்று அதிகரித்திருந்தது; டி.சி.எச்., ரகம் வரத்தில்லை.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 185 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 120 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்த நிலையில், விலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இந்த வார ஏலத்தில், அனைத்து ரக பருத்தியின் விலை விபரம் (குவிண்டால்) வருமாறு:எல்.ஆர்.ஏ., 3,150 முதல் ரூ.3,350 வரை, ஆர்.சி.எச்., ரூ.3,350 முதல் ரூ.3,480 வரை.அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:சீசன் முடிந்துள்ளதால், கடந்த சில வாரங்களாக வரத்து குறைந்திருந்தது. இந்த வாரம் சற்று அதிகரித்தது. இருப்பினும், டி.சி.எச்., ரகம் வரவில்லை. திருப்பத்தூர், கோவில்பட்டி பகுதியில் இருந்து பருத்தியை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். இன்னும் ஒரு மாதத்துக்கு பின், கோடை பருவ பருத்தியின் வரத்து துவங்கும். அப்போது, ஏலம் வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது, என்றார்.

## *கேரளாவில் மிளகு உற்பத்தியை அதிகரிக்க திட்டம் முதற்கட்டமாக 3 பஞ்சாயத்துகள் தேர்வு*

*கோழிக்கோடு,ஜூன்.4–*
*கேரளாவில் குறுமிளகு உற்பத்தியை அதிகரிக்க திட்டம் கொண்டு வரப்படுகிறது. முதற்கட்டமாக சோதனை முறையில் 3 பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது.*

*குறுமிளகு உற்பத்தி*

*கேரள மாநிலத்தில் வயநாடு, மலப்புரம், இடுக்கி ஆகிய மாவட்டங்களில் மிளகு பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் மிளகுகள் அறுவடை செய்து வயநாடு மார்க்கெட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்குமிளகுகள் தரம் பிரித்து, ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு விலை நிர்ணயம் செய்யப்படும்.*
*கடந்த சில மாதங்களாக குறுமிளகிற்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது.*

*குவிண்டாலுக்கு 500 ரூபாய் அதிகரித்து உள்ளது. நேற்றைய நிலவரப்படி குவிண்டாலுக்கு மிளகு(நாடன்)– ரூ.15 ஆயிரமும், மிளகு(சேட்டன்)–ரூ.15 ஆயிரத்து 300–ம், மிளகு(வயநாடன்)– ரூ.16 ஆயிரத்து 800–க்கு விற்பனை செய்யப்பட்டது. பக்கத்து மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வியாபாரிகள் குறுமிளகை கொள்முதல் செய்ய கேரளா வந்து செல்கிறார்கள்.*

*இந்த நிலையில் மாநில அரசு குறுமிளகு உற்பத்தியை அதிகரிக்க பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. முதற்கட்டமாக சோதனை முறையில் மிளகு செடிகளை நட்டு உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.*

*இது தொடர்பாக கேரள விவசாயத்துறை மந்திரி முல்லக்கரா ரத்னாகரன் நிருபர்களிடம் கூறியதாவது:–*

*3 பஞ்சாயத்துகள் தேர்வு*

*வயநாடு மாவட்டம், சுல்தான்பத்தேரியில் 3 பஞ்சாயத்துகளில் சோதனை முறையில் மிளகு செடி நடவு செய்ய திட்டமிட்டு இருக்கின்றோம். இதனால் அந்த 3 பஞ்சாயத்துகளிலும் மண் பரிசோதனை, தண்ணீர் வசதி, சூழ்நிலை அமைப்பு போன்றவை விவசாய விஞ்ஞானிகளால் ஆய்வு செய்யப்பட்டது.*

*தற்போது கேரளாவில் பருவமழை தொடங்கி இருக்கிறது. இது மிளகு செடி நடவு செய்ய நல்ல சீசன். எனவே முதற்கட்டமாக 3 பஞ்சாயத்துகளிலும் மிளகு செடி நடவு செய்ய இருக்கின்றோம். சுல்தான்பத்தேரி பகுதிகளிலும் மிளகு செடி நடவு செய்யப்படும். 6 மாதங்கள் வரை செடியின் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்வோம். அதன் பிறகு இந்த மிளகு செடி மற்ற மாவட்டங்களும் விரிவுப்படுத்தப்படும். அதோடு விவசாயிகள் செயற்கை உரங்களை பயன்படுத்தி, மண் வளத்தை அழிப்பதை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இயற்கை முறையில் உரத்தை ஈட்டு மண்ணை வளப்படுத்த வேண்டும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

## *உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.55%–ஆக உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், மே மாதம் 22–ந் தேதி வரையிலான வாரத்தில் 16.55 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் 16.23 சதவீதமாக இருந்தது.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் மீன்கள் விலை 7 சதவீத அளவிற்கும், கறிக்கோழியின் விலை 5 சதவீத அளவிற்கும், பார்லி மற்றும் கடலை பருப்பு விலை தலா 2 சதவீத அளவிற்கும், பழங்கள் மற்றும் காய்கறிகள் விலை தலா ஒரு சதவீத அளவிற்கும் அதிகரித்து இருந்தன.*

*அதேசமயம் காபி (5%) மற்றும் கோதுமை (1%) ஆகியவற்றின் விலை சற்று குறைந்திருந்தது.*

*கச்சா ரப்பர் (5%), கச்சா பட்டு (4%) ஆகியவற்றின் விலை உயர்ந்திருந்தது.*

*மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்க விகிதம் சென்ற ஏப்ரல் மாதத்தில் 9.59 சதவீதமாக அதிகரித்திருந்தது.*

## *மாதம் ரூ.7 ஆயிரம் சம்பாதிக்க புதிய வழி: பண்ணைக் குட்டைகளை அமைத்து மீன் வளர்க்க தமிழக அரசு ஆலோசனை அதிகாரிகள் நேரடியாக செய்முறை பயிற்சி*

*சென்னை, ஜூன்.4–*
*கிராமப்புறங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் பண்ணை குட்டைகளை அமைத்து மீன் வளர்க்க அரசு எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. இதன் மூலம் மாதம் ரூ.7 ஆயிரம் வரை சம்பாதிக்க முடியும்.*

*அளவோடுதான்*

*கடலில் கரைத்தாலும் சரி, அள்ளினாலும் சரி, அளவோடுதான் இருக்க வேண்டும். கட்டுப்பாடு இல்லாமல் கடலில் நடந்து வந்த மீன்பிடியால் மீன் வளத்தை நாம் இழந்துள்ளோம். தமிழகத்தில் கடலோரத்தில் தான் மீன்பிடி நடக்கிறது. எனவே இந்தப் பகுதிகளில் வசிக்கும் சிறிய மீன்கள் வலையில் சிக்கி மடிந்து விடுகின்றன. எனவே இனப்பெருக்கத்துக்கு வழியில்லாமல் போய்விடுகிறது.*

*ஆழ்கடல் மீன் பிடிப்பு தமிழகத்தில் இல்லை. பல கட்டுப்பாடுகள் இருப்பதாலும், மீன்பிடி கலன்களை பராமரிக்க ஆகும் செலவும் மற்றும் நிபந்தனைகள் அதிகம் என்பதாலும் இந்த நிலை எழுந்துள்ளது.*

*தேனிலவு*

*மேலும், கடல்நீர்–ஆற்றுநீர் கலக்கும் கழிமுகப் பகுதிதான் பலவகை மீன்களுக்கு ‘தேனிலவு’ பகுதியாகும். முந்தைய காலத்தில் அதுபோன்ற இனப்பெருக்கப் பகுதியில், நீருக்குள் செடி கொடிகள் ஏராளமாக வளர்ந்து, சிறிய மீன்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் மறைவிடமாக அமைந்திருந்தன. எனவே இனப்பெருக்கம் தங்குதடையில்லாமல் நடந்து வந்தது.*

*ஆனால் தொழிற்சாலைகள் வெளியிடும் கழிவுகள், கடலோரங்களிலும், கழிமுகங்களிலும் வந்து தேங்குவதால் செடி, கொடிகள் எதுவுமே வளர்வதில்லை. எனவே, மாசுபட்ட நீரில் இனப்பெருக்கத்துக்கும் வழியே இல்லாமல் போய்விட்டது.*

*‘உள்ளதை விற்று உல்லம் வாங்கு’ என்பது பழமொழி. அவ்வளவு ருசியாக இருக்கும் உல்லம் மீன், கழிமுகங்களில்தான் இனப்பெருக்கம் செய்யும். நீர் மாசினால் இனப்பெருக்கம் செய்ய முடியாமல், இந்த மீன் இனம் அழிந்துவிட்டது.*

*ஒரு கட்டத்தில் கடல் மீன்கள் என்பது கனவில் மட்டும் நீந்தி வரும் இனமாக மாறப்போகிறது என்றே தெரிகிறது.*

*மாற்றுத் தொழில்*

*எதையாவது செய்து, கடல்மீன் வளத்தை காப்பாற்ற வேண்டும் என்பதில் அரசு முனைப்பாக இருக்கிறது. இதற்கு மீனவர்களும் தங்களால் முடிந்த அளவுக்கு ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். எல்லாரும் ஒரே நேரத்தில் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லாமல், மீன்பிடி நாட்களை அவர்களுக்குள் பிரித்துக் கொள்கின்றனர்.*

*மீன்பிடியை மட்டுமே நம்பி இருக்காத வகையில் அவர்களுக்கு மாற்றுத் தொழிலுக்கான பயிற்சியையும் வழங்க அரசு முன்வந்துள்ளது.*

*தற்போது கடல் மீனுக்கு மாற்றாக, நன்னீர் மீன்கள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், பண்ணைக் குட்டைகளை அமைத்து மீன் வளர்க்கும் திட்டம் கடந்த 3 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*ஆனால் இது மீனவர்களைவிட விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மீன் வளர்ப்புக்கு தேவையான உதவிகளையும், மானியத்தையும் அரசு தருவதாலும், முதலீடு மிகக் குறைவாகவும், கூடுதல் வருமானம் இருப்பதாலும், விவசாயிகளை உள்ளூர் மீன் வளர்ப்பு வெகுவாக கவர்ந்துள்ளது.*

*கெண்டை மீன்கள்*
*ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில், உபவடி நிலப்பகுதிகளில் குட்டைகளை வெட்டி ஆயிரம் மீன்களை வளர்க்க முடியும். 4 மாதம் முதல் 7 மாதங்களுக்குள் இவை ஒரு கிலோ வரை வளர்ந்துவிடும். ஆயிரம் மீன் குஞ்சுகளில் 600 மீன்கள் மட்டுமே வளர்ந்தால்கூட, இறுதியில் 600 கிலோ மீன் கிடைக்கிறது.*
*கெண்டை மீனை கிலோ ஒன்றுக்கு ரூ.80–க்கு சில்லரை வியாபாரிகள் வாங்குகின்றனர். இதனால் குறைந்தபட்சமாக ரூ.30 ஆயிரம் முதல் ரூ.48 ஆயிரம் வரை லாபம் பெற முடியும். பெரிய பெரிய மார்க்கெட்டுகளில் அவை உயிருடன் ரூ.250 வரை விற்கப்படுகின்றன.*
*90 சதவீத விவசாயிகள்*
*இதுகுறித்து தமிழக மீன்வளத்துறை இணை இயக்குனர் ஆர்.தில்லை கோவிந்தன் கூறியதாவது:–*
*இதில் ஈடுபட்டவர்களில் 90 சதவீதம் பேர் விவசாயிகள். மீன் வளர்க்க அதிக நீர் தேவையில்லை. மீன் வளர்ப்புக்குத் தேவையான குஞ்சுகளையும் அரசே வளர்த்துத் தரும். எனவே பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பை தொடர்ந்து நடத்த முடியும். மீன்வளத் துறை அலுவலர்கள் நேரில் சென்று மீன் வளர்ப்புக்கான பயிற்சிகளை அளிக்கின்றனர்.*
*இந்தியாவில் ஆண்டொன்றுக்கு ஒரு நபர் உண்ணும் மீனின் எடை 2 கிலோவாக இருந்தது. தற்போது அது 14 கிலோவாக அதிகரித்து இருக்கிறது. எனவே மீன் வர்த்தகம் மூலம் இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி 4 சதவீதம் அதிகரிக்கும். மீனின் கொழுப்பும் உடலுக்கு நல்லதுதான்.*
*இவ்வாறு அவர் கூறினார்.*

## கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி தெங்குமரஹாடா விவசாயிகள் முற்றுகை போராட்டம்

*ஊட்டி, ஜூன்.4–*
*கோரிக்கைகளை நிறை வேற்ற கோரி நேற்று தெங்குமரஹாடா விவ சாயிகள் கலெக்டர் அலு வலகத்தை முற்றுகை யிட்டனர்.*
*ஆர்ப்பாட்டம்*
*கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்டது தெங்குமரஹாடா ஊராட்சி. இங்குள்ள கூட்டுறவு பண்ணை சங்க நிலத்தில் விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த நிலையில் தங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று கோரி நேற்று முன்தினம் விவசாயிகள் கூட்டுறவு பண்ணை சங்க அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்போது அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்கு வராததால் விவசாயிகள் அலுவலகத்துக்கு பூட்டு போட்டனர்.*
*முற்றுகை*
*ஆனால் தொடர்ந்து அதிகாரிகள் நேற்றும் பேச்சுவார்த்தைக்கு செல்லா ததால் விவசாயிகள் ஊட்டி யில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை நேற்று மாலை முற்றுகை யிட்டனர்.*
*தெங்குமரஹாடா விவசாய தொழிலாளர் நல சங்க தலைவர் மனோகரன் தலைமையில் அவர்கள் முற்றுகையிட்டனர். இதில் தெங்குமரஹாடா ஊராட்சி தலைவர் இருதயராஜ், துணை தலைவர் ரெங்கசாமி மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.*
*பின்னர் அவர்கள் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தங்களது கோரிக்கை மனுவை கொடுத்தனர். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:–*

2009–10 நிதியாண்டு பருவத்தில் பயிரிடப்பட்ட தரமில்லாத சோயா விதையினால் மகசூல் கிடைக்கவில்லை இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு பண்ணை சங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை. எனவே 3 மாத தவணைக்கு சோயா விதை கண்டிப்பாக வழங்க வேண்டும்.
நீர் பாசனத்துக்கு குழு அமைத்து, முறையாக நீர்பாசன வசதி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். சூரிய மின் வேலி சரியாக பராமரிக்காததால், வன விலங்குகளால் விவசாய பயிர்கள் அழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
பாசன வசதிக்காக புதியதாக மின் இணைப்பு வழங்க வேண்டும், தெங்குமரஹாடா– பவானிசாகர் சாலையை பராமரிப்பதை பண்ணை சங்கம் ஏற்க வேண்டும்.
ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்க வேண்டும்.
பண்ணை சங்க கட்டுப் பாட்டில் உள்ள அரிசி ஆலையை முறையாக பராமரித்து சீராக இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகள் மனுவில் கூறப்பட்டு இருந்தது.